கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை [13-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 313

# ஜனாதிபதிக்கு எதிராக மீண்டும் குற்ற விசாரணைப் பிரேரணை

## புங்குடுதீவை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்கு!

புங்குடுதீவுப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் [வெள்ளி] இரவு கடும் ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அனலைதீவு, எழுவைதீவு முகாம்களில் இருந்து ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும், கடற்பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் தெரியவருகிறது.

புங்குடுதீவில் குறிகாட்டுவான் கண்ணகை அம்மன் கோவிலுக்குச் சமீபமாக கடற்பிராந்தியத்தில் இரு கடற் படைப் படகுகள் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல்கள் உக்கிரம் அடைகவே, புங்குடு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## லலித் குழு எம். பி. ஒருவர் மீண்டும் பிரேமா பக்கம்

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தலைமையிலான அதிருப்தி குழுவில் சேர்ந்து கொண்ட மாத்தறை மாவட்ட எம். பி. டாக்டர் பி. எம். பி. சிறில் மீண்டும் ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையிலான அணிக்குத் திரும்பியுள்ளார்.

இது அத்துலத்முதலி குழுவுக்கு பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

[உ-எ]

## எதிரணியைக் கண்டித்து அரச தரப்பு பிரேரணை

எதிர்க் கட்சியினைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றை நடாளுமன்றத்தில் கொண்டுவர ஆளும் ஐ. தே. க. முயற்சிப்பதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டு வரும் விஷயத்தில் சபாநாயகர் மீது எதிரணியினர் தேவையற்ற முறையில் செல்வாக்குப் பிரயோகித்ததமையைக் கண்டிப்பதாக அப்பிரேரணை அமையும் என்று அறியவருகிறது.

சபாநாயகர் மீது தேவையற்ற முறையில் செல்வாக்கைப் பிரயோகித்தது அரசியல் சாசனத்தை மீறும் ஒரு செயல் என்று ஆளும் கட்சி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(அ-எ)

## கண்டி நகரில் பிரேமா நன்றி தெரிவித்து கூட்டம்

கொழும்பு, அக். 13

ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றியைக் குறிக்குமுகமாக கண்டியில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை ஜனாதிபதி பிரேமதாசா தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சூழ்ச்சி பற்றிய விபரங்கள் இப் பொதுக்கூட்டத்தில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

சனிக்கிழமை காலை ஜனாதிபதி தலைமையில் பிரதமர், அமைச்சர்கள், அரச எம். பிக்கள், மாகாண ஆளுநர்கள், மாகாண முதலமைச்சர்கள் ஆகியோர் தலதா மாளிகையில் மத வழிபாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர்.

இதே வேளை—

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை தலதா மாளிகை முன்பாக 84 ஆயிரம் விளக்குப் பூஜை ஒன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ-எ]

## சபாநாயகருக்கு லஞ்சம் வழங்க நவலோக அதிபர் முயன்றாராம்!

கொழும்பு, அக். 13

'நவலோக' நிறுவனங்களின் அதிபர் தமக்கு லஞ்சம் வழங்க முன்வந்தார் என்று சபாநாயகர் என்னிடம் கூறினார்.

அந்த லஞ்சத்தை ஏற்க தாம் மறுத்து விட்டதாகவும் அவர் என்னிடம் கூறினார்.

சபாநாயகர் நாடாளுமன்றத்துக்கு முன்னால் வந்து இந்த விடயம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

—இவ்வாறு நாடாளுமன்றத்தில் கூறினார் ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரதிநிதி திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

தானும் மற்றைய எம். பிக்களும் சபாநாயகரின் வீட்டிற்குச் சென்று அங்கு வைத்தே, ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையில் கையொப்பமிட்டதாக அவர் சொன்னார்.

ஆரம்பத்தில் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை குறித்து உறுதியாக நின்ற சபாநாயகர், பின்னர் நிலை மாறித் தீர்ப்பளித்தது ஏன் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

[உ-எ]

## மாத இறுதியில் கொண்டுவர அதிருப்தி குழுவினர் முயற்சி

கொழும்பு, அக்டோபர் 13

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு எதிராக மீண்டும் ஒரு குற்ற விசாரணைப் பிரேரணையை இம்மாத இறுதியில் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர ஐ.தே.க. அதிருப்திக் குழுவினர் முயன்று வருவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே இந்தப் பிரேரணையைக் கொண்டுவர அதிருப்தியாளர்கள் முயல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமக்கு எதிராகவும், தமது கட்சி அரசுக்கு எதிராகவும் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி பிரேமதாஸ தமது அதிகாரத்தை வலுப்படுத்திக்கொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

ஜனாதிபதி தமது அதிகாரத்தை வலுப்படுத்தியிருப்பதால் இனி தங்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகள் அவர் ஈடுபடலாம் என்று அவருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையில் கையெழுத்திட்டதாகச் சந்தேகப்படும் ஆளும்கட்சி எம். பிக்கள் கருதுகின்றனர்.

இந்த எம். பிக்களின் ஆதரவை மீண்டும் பெற்று, எதிர்க்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நேற்று ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், அக். 13

காங்கேசன்துறை முகாமில் இருந்து நேற்று இரவு 7. 30 மணியளவில் வேலணைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வேலணை சாட்டி மாதா கோவிலடியைப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம்—

மாதகல், சேந்தாங்குளம் கடற்பிராந்தியத்தில் இருந்தும் நேற்று மாலை 6 30 மணிகளில் கடற்படையினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

காரைநகர் படையினரும் நேற்று பீரங்கி, ஷெல் மற்றும் துப்பாக்கித் தாக்குதல்களை நடத்தினர்.

(ஒ-15-18)

## பாதுகாப்புச் செலவு அதிகரிப்பை ஆட்சேபித்து நோர்வே உதவி வெட்டு

ஒஸ்லோ, அக். 13

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு வழங்கும் நிதி உதவியைக் குறைப்பதற்கு நோர்வே முடிவு செய்துள்ளது.

மனித உரிமை மீறப்படுதல், பாதுகாப்புச் செலவின அதிகரிப்பு ஆகியவற்றுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்திலேயே நோர்வே அடுத்த வருடம் வழங்கும் நிதி உதவியை வெட்டியுள்ளது.

ஆசிய நாடுகளில் மனித உரிமை மீறல்களும், பாதுகாப்புச் செலவினங்களும் அதிகரிக்கின்றன. அதனால் இனி மேல் அதிகளவு உதவியை பொருளாதார ரீதியில் கஷ்டப்படும் ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்க தமது அரசு முடிவு செய்திருப்பதாக அபிவிருத்தி உதவி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியான திரு. ஸ்வெயின் ரோவியாஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தொடர்ந்து இழைத்து வரும் இன்னல்களையும், நாட்டில் மலிந்துள்ள மீறல்களையும் மனதிற்கொண்டே அதற்கான நிதி உதவி பத்து சதவீதத்தால் குறைக்கப்பட்டதாக திரு. ரோவியாஸ் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசுக்கு வருடாந்தம் வழங்கும் நிதி உதவிக்கு மேலதிகமாக, நோர்வேயில் உள்ள தொண்டர் நிறுவனங்களும் பெருந்தொகைப் பணத்தை இங்குள்ள தொண்டர் நிறுவனங்கள் மூலம் வழங்கி வருகின்றன. (அ)

## எமது கலை, பண்பாட்டு வளர்ச்சியில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வோம்!

### வெளியீட்டு விழாவில் மாத்தயா உரை

யாழ்ப்பாணம், அக். 13

"கலை, இலக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலமும், மூத்த கலைஞர்களைக் கௌரவிப்பதன் மூலமும் கடந்த காலத்தில் எமது கலை, பண்பாட்டு வளர்ச்சியில் ஏற்பட்ட இடைவெளியை — இழப்பை ஈடு செய்வோம். இதனை எமது போராட்டப் பணிகளில் முக்கியமான ஒன்றாகக் கருதிச் செயற்படுவோம்".

—இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராஜா மாத்தயா.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ... வெளியீட்டு விழா நேற்று யாழ் இந்து மகளிர் கல்லூரி கலை அரங்கில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு திரு மாத்தயா சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த ஒரு பெரினவாத சக்தியோ அல்லது வேறு ஓர் இனமோ அல்லது நாடோ இன்னோர் இனத்தை அடக்க

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தீவுப் பகுதி மக்களை படையினர் துன்புறுத்தல்

யாழ்ப்பாணம், அக். 13

எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் கடந்த சில தினங்களாக படையினர் தரை இறக்கப்பட்டதால் மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் மக்களைத் துன்புறுத்துவதாகவும், சிலரைக் கைது செய்துள்ளதாகவும் அறியவருகிறது.

அங்குள்ள மக்கள் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலும், போதிய உணவு இன்றியும், படகு சேவை இன்றியும் - பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-3]

## நெடியவெட்டைப் பகுதியில் படையினர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 13

மட்டக்களப்பு மாவட்டம், சின்னாவத்தை முகாமைச் சேர்ந்த படையினர் நெடிய வெட்டை என்னும் தமிழ்க் கிராமத்தை கடந்த 9 ஆம் திகதி சுற்றிவளைத்த சமயம் அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்போது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதல்களால் தமிழ் மக்களின் சொத்துக்கள் சேதமடைந்தன.

[ஒ-8]

## அரசியல் கட்சிகளின் குழு வவுனியா வருகிறதாம்

கொழும்பு அக். 13

சகல அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட குழு ஒன்று இம் மாதம் 18 ஆம் திகதி வவுனியா வர இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

புனர் நிர்மாண, புனர் வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் வரும் இந்தக் குழு வவுனியா அரச அதிபர் கே. மார்க்கண்டுவைச் சந்தித்து உரையாடும் என்றும் —

பின்னர் தாண்டிக்குளம் தடைமுகாம், மூதூர் அல்லது அசோகாம் போன்ற பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானிக்கும் என்றும் கூறப்படுகிறது.

(த)

## வடக்கிற்கு அதிகளவு ம. எண்ணெய் வரும்!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு கூடுதல் மண்ணெண்ணெய் வர வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கே மண்ணெண்ணெய் எடுத்து வர இருந்த சில தடைகள் தளர்த்தப்பட்டுள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



பிரேரணை மீது பிரேரணை வந்து பிரேமாவைச் சேரும்... அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் லலித்தைச் சேரும்...!

## நோர்வே அதிகாரிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், அக். 13

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிடவும், நிவாரணப் பணி தொடர்பாக ஆராயவும் நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

சங்கத்தின் தலைவர் திரு. சவில்லைஸ், உறுப்பினர் திரு. சென்கே ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

அவர்களுடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு கிழக்கு நிவாரணப் பணிப்பாளர் திரு. சி. தயாலதேவரும் வந்துள்ளார்.

[ஒ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தலை நிமிர்ந்து வாழ...

ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட உள்ளது.

ஜேர்மனி மட்டுமல்ல; பிரிட்டன், பிரான்ஸ், டென்மார்க், சுவிஸ் என்று மேலைநாடுகள் பலவும், வெளிநாட்டவர்களை அகதிகளாக ஏற்றுத் தஞ்சம் அளிக்கப் பின்னிற்கின்றன. அதற்கேற்ற விதத்தில் தத்தமது நாட்டுச் சட்டங்களையும், விதிமுறைகளையும் மாற்றுகின்றன; கட்டுப்படுத்துகின்றன.

மேற்கு நாடுகளின் இந்தப் புதிய போக்குக்குப் பல காரணங்கள் உள்ளன.

அமெரிக்க - ரஷ்ய கெடுபிடி யுத்தம் முடிந்து விட்டது. கம்யூனிசம் மேற்கில் வீழ்ச்சி கண்டுவிட்டது. அதன் காரணமாக கிழக்கு ஐரோப்பிய அகதிகள் பிரச்சினையைப் பூதாகாரமாக்கி கம்யூனிசத்தை வீழ்த்த முயற்சி செய்ய வேண்டிய தேவை இல்லாமற் போய்விட்டது.

அதனால், கிழக்கு ஐரோப்பிய அகதிகளுக்குச் செய்யப்பட்ட நன்மைகள் மூன்றாம் உலக அகதிகளுக்குப் பயனளிக்கும் நிலை இல்லாமற் போகப் போகிறது!

மேற்கு ஐரோப்பாவின் கைத்தொழில் சார் தொழிலாளர் தேவையை கிழக்கு ஐரோப்பியத் தொழிலாளர்களாலேயே பூர்த்தி செய்யக் கூடிய அரசியல் பின்புலம் தோன்றியுள்ளது.

மூன்றாம் உலக அகதிகளுக்கு, சமூக உதவிப் பணமாகச் செலவிடப்படும் நிதியை கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு வழங்குவதற்கு மேற்கு ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன. தம்மினத்துக்கு உதவ அவர்கள் விரும்புவது இயல்பே.

இந்தக் காரணங்களை விட, மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள், அகதிகளாக இருந்து கொண்டு, தங்களை விட அதிக வருவாய், வசதி, வாய்ப்புகளை அனுபவிக்கிறார்கள் என்ற பொறாமையும் ஐரோப்பியரிடம் வளர்ந்து வருகிறது.

இந்தப் பொறாமை உணர்வு, தீவிரமாக மாறி, மூன்றாம் உலக நாடுகளின் அகதிகள் தாக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கும் விடுதிகள் எரிக்கப்படுகின்றன. அவர்களிடம் வழிப்பறி, கொள்ளை, திருட்டு என்பன நடத்தப்படுகின்றன.

மொத்தத்தில் ஈழத் தமிழ் அகதிகள் மேற்கு நாடுகளில் விரும்பத்தகாதவர்களாகி வருகிறார்கள். அந்த நாடுகளின் சட்டங்களால் பந்தாடப்படுகிறார்கள். சொந்த நாட்டை விட்டுச் சென்று அங்கு நாதியற்றவர்களாக வாழவேண்டி உள்ளனர்.

இங்கு பாதுகாப்பில்லை என்று வெளிநாடு சென்றவர்களுக்கு அங்கும் பாதுகாப்பில்லை. தற்காலிக தஞ்சம் கிடைத்து விட்டால் நிரந்தரமாக வாழ வாய்ப்பு உண்டாகும் என்று நினைத்தவர்களுக்கு அது பொய்யானது என்பதை அந்த நாடுகள் உணர்த்த ஆரம்பித்துள்ளன.

சொந்த மண்ணில் இல்லாத பாதுகாப்பும், வாழ்வும், சௌரவமும் வெளிநாடுகளில் கிடைக்கப் போவதில்லை என்பதை ஈழத் தமிழர்கள் இப்போதாவது உணர வேண்டும்.

எமக்கென்று ஒரு தேசம், எமக்கென்று ஓர் அரசு உருவானால் மட்டுமே நாம் ஒரு தேசத்தின் மக்களாக எங்கு சென்றாலும் தலை நிமிர்ந்து நிற்க முடியும். எமது உரிமைகளைப் பெற்று விட்டால் வெளிநாடுகளில் அகதிகளாய் அலைய வேண்டியதில்லை!

## கோட்டங்கள் தோறும் கல்வி அபிவிருத்திக் கழகம்

### அமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 13

கல்விக் கோட்ட மட்டங்களில் கல்வி அபிவிருத்திக் கழகங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கின்றன.

யாழ் கோட்ட கல்விக் கழகம் நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும்—

தென்மராட்சிக் கோட்ட கல்விக் கழகம் நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக கல்லூரி மண்டபத்திலும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் என்று அந்தந்த கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. [உ]

### எமது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்றும்போது முதலில் அந்த இனத்தின் கலை, பண்பாட்டு வடிவங்களைச் சிதைக்கவே முற்படும். காலங்காலமாக எம் இனத்தை ஆக்கிரமித்தவர்களும் அடக்கி ஆண்டவர்களும் அவ்வாறே செய்தனர்.

ஓர் இனத்தின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் ஆதாரமாக இருக்கின்ற கலை இலக்கிய வடிவங்களின் மூலம் சில சமயங்களில் உண்மையைப் பொய்யாகவும் உள்ளதை இல்லாததாகவும் மாற்றிவிட முடியும்.

எம் மண்ணின் கடந்தகால கலை இலக்கிய வடிவங்களை ஆய்வு செய்யும் போது இதனைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆகவே—

கலை இலக்கிய வடிவங்கள் மூலம் இந்த மண்ணில் உண்மையை உண்மையாகவும், இருப்பதை இருப்பதாகவும் வெளிப்படுத்த தமிழீழ கலைஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள் முன்வர வேண்டும்.—இவ்வாறு அவர் அழைப்பு விடுத்தார்.

கலை, பண்பாட்டு வடிவங்களை போராட்டத்துடன் இணைக்கும் முக்கியமான பணியில் எமது கலை பண்பாட்டுக் கழகத்தினர் செயற்பட்டு வருகிறார்கள் என்று அவர் சொன்னார்.

வெளியீட்டுவிழாவிற்கு கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமை வகித்தார்.

சிறப்பு நிகழ்ச்சியாக முதுபெரும் எழுத்தாளர்கள் அ. செ. முருகானந்தம், அல்வை ஆறுமுகம் ஆகியோரை கௌரவித்து அவர்களுக்கான கௌரவப் பரிசை திரு. மகேந்திரராஜா வழங்கினார்.

''வெளிச்சம்'' முதல் பிரதியை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. தேவரிடமிருந்து மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் வி.புலிம.முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், திரு பொன். பூலோகசிங்கம், திரு கேசாக்கலிங்கம் [சொக்கன்], கவிஞர் இ.முருகையன், திரு. அ. யேசுராசா, திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோரும் உரையாற்றினர். [உ-5]

### விஞ்சுவாரின்றி...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என அத்தனை பாத்திரங்களையும் நிறைவுற செய்து முடித்த பெருமானுக்கு மணிவிழா.

யாழ்ப்பாணமே ஏன்? சமுத்தமிழுலகமுமே பெருமிதமும், குதூகலமும் கொள்கிறது.

பத்தாண்டு நிறைவுகாணும் அகில இலங்கைக் கம்பன் கழக வளர்ச்சியின் மணிவிழா நாயகனின் பங்களிப்பு மகத்தானது. கம்பன் கழகம் உரிமையும் நன்றியும் பொங்க மணிவிழா நாயகனை வாழ்த்துகிறது, வணங்குகிறது.

வாழ்க அவர் புகழ்!

க. குமாரதாசன்
செயலாளர்
அகில இலங்கைக்
கம்பன் கழகம்;

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், அக். 13

யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு 'இலங்கை வேந்தன்'' இசை, நடன, நாடக நிகழ்ச்சி நடைபெறும்.

யாழ். வண்ணார்பண்ணை நீராவியடி சைவசித்தாந்த உயர் நிறுவனத்தின் நிதியுதவிக்காக இந்த நிகழ்ச்சி இடம் பெறுகின்றது.

★ ★ ★

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் இன்று பிற்பகல் 2 மணிக்கு செஞ்சிலுவைச்சங்க கிளை ஒன்று திறந்துவைக்கப்படுகிறது.

நேரவே செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் திரு. சவின்னஸ் இதனைத் திறந்து வைப்பார். [ஓ]

★ ★ ★

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ்மன்றம் இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் பாராட்டுவிழா ஒன்றை நடத்துகின்றது.

சங்கீத பூஷணம் திரு கணபதிப்பிள்ளை (பாட்டு). திரு.பா. கண்ணன் [வயலின்], திரு. க. கண்ணதாசன் (மிருதங்கம்) ஆகியோரே பாராட்டப்படவுள்ளனர்.

★ ★ ★

நிதர்சனம் நிறுவனத்தின் எட்டாவது தயாரிப்பான உதயம் இசை நாடா வெளியீட்டு வைபவம், இன்று முற்பகல் 10 மணிக்கு, யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அந்தக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

### வடக்கிற்கு ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளதாலும்—

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அநுராதபுரம் குதத்தில் இருந்து மண்ணெண்ணெய் பரல்களை நிரப்பி எடுத்து வர வசதி செய்யப்பட்டுள்ளதாலுமே அதிகளவு மண்ணெண்ணெய் எடுத்து வர வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் எடுத்துவருவதில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதால், யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் உள்ள — உத்தரவு பெற்ற — பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் அதிகளவு மண்ணெண்ணெய்யை எடுத்து வரும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### புங்குடுதீவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீவுப் பகுதியிலிருந்து மக்கள் இரவே டிரவாவுக்கு இடம் பெயரத் தொடங்கினர். யாழ். நகரப்பகுதிக்கும் கூட மக்கள் வந்து சேர்ந்தனர்.

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், அக். 13

வீட்டு கிணற்றில் கருக்கிட்டுத் தொங்கிக்கொண்டிருக்கக் காணப்பட்டதாகக் கூறப்படும் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை யாழ் ஆஸ்பத்திரியில் அவரது உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த சதானந்தப் பத்தர் நடராசா (வயது 36) என்பவரே இறந்தவர் ஆவார்.

## நவம்பர் 13 இல் பட்ஜெட்

கொழும்பு, அக். 13

1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் அடுத்த மாதம் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பிரதம மந்திரியும் நிதியமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உத்தேச வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தார்.

1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வருமானம் 8 ஆயிரத்து 700 கோடி ரூபாவாகவும், செலவீனம் 15 ஆயிரத்து 660 கோடி ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது; 6 ஆயிரத்து 960 கோடி ரூபா துண்டு விழும் தொகை ஆகும். (இ-த)

## 3,000 பேர் கலரியில்!

கொழும்பு அக். 13

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்பட்ட நாளான கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற கலரியில் 3,000 பேர் வரை பார்வையாளர்களாக அமர்ந்திருந்தனர்.

நாடாளுமன்ற வரலாற்றிலேயே இவ்வளவு அதிகமானோர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டது இதுவே முதல் தடவை என்று கொழும்பு அரச சார்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 13

வட இலங்கை மருத்துவர் சங்கத்தின் ஆதரவில் 'மருந்துகள் கொள்வனவு - விநியோகம்' பற்றிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருக்கிறது.

வண்ணார்பண்ணை, வண். மேற்கு வைத்தியசாலையில் நாளை திங்கட்கிழமை [14 ஆம் திகதி] பிற்பகலில் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

தனியார் மருத்துவ மனைகளைச் சேர்ந்த வைத்தியர்களுக்கும், தனியார் வைத்தியர்களுக்குமான கருத்தரங்கு பி.ப. 2.00 மணிக்கு ஆரம்பமாகும். தொழிலில் ஈடுபடும் பதிவு பெற்ற வைத்தியர்களுக்கான கருத்தரங்கு பி.ப. 3-30 மணிக்கு ஆரம்பமாகும். [*]

## வீட்டுத் தோட்ட போட்டி

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய உதவியுடன் யாழ் மாநகரசபைப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது.

யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் என்றும், பங்குபற்றும் தகுதியுடையவர்களுக்கு சில விதைகள் இலவசமாக வழங்கப்படவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகராட்சி மன்ற 'யுனிசெவ்' பகுதியுடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## அமேதியில் போட்டியிட சோனியா காந்தி மறுப்பு!

உத்தரப்பிரதேசம், அமேதி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட திருமதி சோனியா காந்தி மறுத்துவிட்டார்.

இத் தகவலை பிரதமரும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு பி. வி. நரசிம்மராவ் நேற்று செய்தியாளரிடம் வெளியிட்டார்.

இதே வேளை —

பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக தேசிய முன்னணி போட்டியிடாது என்று முன்னணித் தலைவர்களில் ஒருவரான எஸ். ஆர். பொம்மை கூறியிருப்பது அவரின் சொந்தக் கருத்து என்று முன்னணியின் இன்னொரு தலைவரான கே. பி. உன்னிகிருஷ்ணன் கூறினார்.

பிரதமருக்கு எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்துவது பற்றி பரிசீலனை நடந்து வருகிறது. விரைவில் தேசிய முன்னணியும் இடதுசாரிக் கட்சிகளும் இது குறித்து ஒரு முடிவு எடுக்கும் என்று முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தெரிவித்தார். (ஓ-எ)

## பத்மநாபா கொலை:

## முன்னாள் உள்துறை செயலாளர் கொலையாளிகளுக்கு உதவினார்

### பொலீஸ் அதிகாரி குற்றச்சாட்டு

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபாவையும் அவரது சகாக்கள் 14 பேரையும் சுட்டுக்கொன்றவர்கள் தமிழ் நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல தமிழ்நாடு மாநில முன்னாள் உள்துறை செயலர் திரு. ஆர். நாகராஜன் உதவினார் என்று தமிழக பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொலை செய்தவர்களின் நடமாட்டம் குறித்து கண்டும் காணாததுபோல நடந்து கொள்ளுமாறு திரு. நாகராஜன் தமிழகப் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தாராம். (உ-த)

## ஜே.வி.பி. சந்தேக நபர்கள் 25 பேர் கைதாகினர்

கொழும்பு, அக். 13

தளவல்கல, குடாஓயா, அம்பாந்தோட்டை, வீரகட்டிய, வலஸ்முல்ல, பெலியத்த பகுதியில் இருந்து 25 ஜே. வி. பி. சந்தேக நபர்களை பெலியத்த பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர்களிடமிருந்து தன்னியக்க துப்பாக்கிகள், தோட்டாக்கள், கைக்குண்டுகள், வானொலிக் கருவிகள், கைக்கடிகாரங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதேவேளை— மொனராகல பொலீஸார் புத்துவெட்டிய என்னுமிடத்தில் வாவி ஒன்றிலிருந்து துப்பாக்கிகள், மருந்து வகைகள், உணவுப் பொருள்கள் ஆகியவை அடங்கிய பொதி ஒன்றை எடுத்துள்ளனர். [த]

## தேவையற்ற இந்த யுத்தம் விரைவில் முடிய வேண்டும்!

### படையினர் மத்தியில் பிரேமா உரை

கொழும்பு, அக். 13

வடக்கிலும் கிழக்கிலும் நடந்துவரும் தேவையற்ற யுத்தம் விரைவான ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதுவே எனது பிரார்த்தனை. நாட்டின் நிர்மாணத்தில் இராணுவத்தினரின் பங்களிப்பைப் பெறக்கூடிய நாளை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

பனாகொடை முகாமில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இவ்வாறு கூறினார்.

இராணுவம் நீடித்தகால யுத்தம் ஒன்றில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை என்றும் அவர் அங்கு சொன்னார். (ஓ-த)

## சபைக்கு வந்த ஸ்ரான்லிக்கு அரச எம். பிக்கள் வரவேற்பு

சுதந்திரக் கட்சி எம். பியும் முன்னாள் சபாநாயகருமான திரு ஸ்டான்லி திலகரத்ன கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தபோது ஆளும் கட்சி எம். பிக்கள் மேசையில் தட்டி கரகோஷம் செய்து அவரை வரவேற்றனர்.

அன்றைய தினம் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம், திரு. திலகரத்ன சபையில் இருக்கவில்லை என்பது தெரிந்ததே. [ஓ]

## மீண்டும் சேவையில் சேருவோருக்கு

## இளைப்பாறும் போது பெற்ற அதே சம்பளம் வழங்க முடிவு!

மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள இளைப்பாறிய அரசாங்க ஊழியர்களுக்கு அவர்கள் இளைப்பாறும்போது பெற்ற தொகை, சம்பளமாக வழங்கப்பட வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த]

### ஜனாதிபதி ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் உதவியோடு ஜனாதிபதிக்கு எதிராகத் திரும்பவும் ஒரு குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டுவர ஐ. தே. க. அதிருப்தியாளர்கள் முயல்வதாக ஒஜெஜன்ஸி செய்திகள் தெரிவித்தன. [உ-3]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோப்பாய் உ. அ. அ. பிரிவின் கீழ்
அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பகுதியில்

செஞ்சிலுவைச் சங்கக் கிளை

## திறப்பு விழா

இன்று பிற்பகல் 2 மணிக்கு
நேர்வே செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்
திரு. ஈவின்னஸ் அவர்களால்
திறந்து வைக்கப்படும்.
அனைவரையும் அழைக்கிறோம்.

செஞ்சிலுவைக் கிளைச் சங்கம்
கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

[C/0812]

---

யாழ். அண்ணாமலை மன்றத்தின்
சார்பில் நடைபெறும்

## பாராட்டு விழாவும், இசையரங்கும்

பாராட்டுப் பெறும் கலைஞர்கள்

சங்கீத பூஷணம்:
திரு சு. கணபதிப்பிள்ளை (பாட்டு)
(சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர், தலைவர் அ. இ. த. மன்றம்)

சங்கீத கலா வித்தகர்:
திரு பா. கண்ணன் [வயலின்]

மிருதங்க கலா வித்தகர்:
திரு. க. கண்ணதாசன் (மிருதங்கம்)

இடம்: அண்ணாமலை
– இசைத் தமிழ் மன்ற அரங்கு
(நல்லூர், பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில்)

காலம்: 13 – 10 – 1991
ஞாயிறு மாலை 3 - 00 மணி.

தலைவர்: திரு க. சொக்கலிங்கம் M.A. [சொக்கன்]

(18124)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்: 2 — 8 — 1971

வீர மரணம்: 13 — 10 — 1987

### 2 ஆவது லெப். சண்
[ஜெகராசா ஜெயசீலன்]

[13-10-87 அன்று கோப்பாயில் இந்தியப் படையுடன் நேரடி மோதலில் வீரமரணம்]

எங்கள் அன்பின் அருந்தவமே! அழகுச்சிலையே! விடுதலை விருட்சத்திற்கு விதையாகி விட்ட செல்வமே! மானம் ஒன்றே பெரிது மண்ணை காப்பது உறுதி என்றாய். தானம் செய்வோம் உயிரை தடங்கல் எதுவுமின்றி என்றாய் களமது புகுந்து தமிழினம் வாழப் புறப்பட்ட வேங்கை சீலா! தமிழ் மண்ணைக் காத்திட வீறு கொண்டு பாய்ந்தாயே! உன் பிரிவால் நாங்கள் நிலை குலைந்து நிற்கின்றோமையா அன்புக் கோபிலே நீ காட்டிச் சென்ற பாதையை நாம் நிழலாகத் தொடுவோம். நீரோடும் கண்களில் நிற்பதெல்லாம் உன்னுருவம் உன் இழப்பை தாங்க முடியாது துடித்து நிற்கும்;

பெற்றோர், சகோதரர்.

''சண் வீதி''
நாவற்குழி – கிழக்கு,
தச்சன்தோப்பு.

[4332]

---

# A/L 93

19 - 10 - 1991 முதல்

[illegible]
## ஐங்கரநேசன்
யூனிவேர்சல்

கந்தர்மடம் ——— யாழ்ப்பாணம்.

(இ/0803)

---

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)
## ஆங்கில பேச்சு வகுப்பு-சான்றிதழ்

1990ஆம் ஆண்டு ஆங்கில பேச்சு (English - Elocution) பரீட்சையில் தோற்றி சித்திபெற்ற மாணவர்களுக்கு எதிர்வரும் 15-10-1991ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணிக்கு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மின்தறி நிலையக் கட்டிடத்தில் சான்றிதழ்கள் வழங்கப்படும் சான்றிதழ்கள் பெறுபவர்கள் தவறாது சமுகமளித்து பெற்றுக் கொள்ளவும்.

இப்படிக்கு.
கூட்டுறவுச் சேவையிலுள்ள,
தலைவர்,
தெல்லி. ப. நோ. கூ. சங்கம்.

[இ-0802]

---

# BITSMANS
## கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L 92 கணித, விஞ்ஞான புதிய பிரிவுகள்

| | | |
|---|---|---|
| பௌதிகம் | — | சௌந்தி (சர்ப்புப்புலம்) |
| பௌதிகம் | — | அருள்தாஸ் (வெப்பவியல்) |
| தூயகணிதம் | — | கமலசிங்கம் (தொடர்) |
| பிரயோக கணிதம் | — | கமலசிங்கம் (மூட்டிய கோல்) |
| இரசாயனம் | — | செல்வா (வெப்பஇரசாயனம்) |

ஆரம்பம்: 14-10-1991 திங்கள் 4-30 p.m.

[C-0713]

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை பீலிக்ஸ்
### ஜீவரட்ணம் குருஸ்குவில் (மோகன்)

வீரஜனனம்: 1968-09 10

வீரமரணம்: 1988 10 12

திதி: 1991-10 12

1988 அக்டோபரில் கொக்குவிலில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த வீர வேங்கை பீலிக்சிற்கு எமது அஞ்சலிகள்

செல் யூட் லேன்,
பலாலி, வயாவிளான்.

அப்பா, அம்மா,
சகோதரர்.

(C/0818)

---

# உதயம்
## இசை நாடா வெளியீடு

எமது நிதர்சனம் நிறுவனத்தின்
எட்டாவது தயாரிப்பான
உதயம் இசை நாடா வெளியீடும்

அதனைத் தொடர்ந்து
அதே கலைஞர்களால் இசைக்கப்படும்
இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இடம்:- யாழ். இந்துக் கல்லூரி.
காலம்:- இன்று [ஞாயிற்றுக்கிழமை]
காலை 10 மணிக்கு.

★ குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நிதர்சனம்,
தமிழீழம்.

(சி/0811)

---

## வடமராட்சி
## பாண் பாவனையாளர்களுக்கு!

மிக விரைவில் யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க வடமராட்சிக் கிளையினால் ரூபா 8/- இற்கு மேற்படாமல் 350 கிராமிற்கு குறையாத பாண் விநியோகம் செய்வதாக சங்கம் தீர்மானித்துள்ளது அதன் பிரகாரம் கடை உரிமையாளர் ரூபா 8/- இற்கு விற்பனை செய்ய வேண்டும்: கடை உரிமையாளருக்கு 30 சதம் கழிவு வழங்கப்படும். விற்பனையாளர் கழிவு 45 சதம் வழங்கப்படும் இதனை மீறும் பேக்கரி உரிமையாளர்கள், கடை உரிமையாளர்களின் பாண் விற்பனை சங்கத்தால் தடை செய்யப்படும்: ஆகவே அனைவரும் பொதுமக்கள் நலன் கருதி தரமான பாண் விநியோகம் செய்யும்படி சங்கத்தால் வேண்டப்படுகின்றீர்கள்.

நன்றி.

மா. கனகராசா
செயலாளர்,
வடமராட்சிக்கிளை.

(18451)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலாம்பிகை மகேந்திரா

யாழ்ப்பாணம் ''மகேந்திரா'' இல 6 மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த திருமதி பாலாம்பிகை மகேந்திரா காலமானார். அன்னார் சுந்தரோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி வீரவாகு சோமசுந்தரத்தின் மூத்த மகளும், காலஞ்சென்ற திரு. துரைச்சாமி மகேந்திரா [இளைப்பாறிய இலங்கை வங்கி சிறாப்பர்]வின் அன்பு மனைவியும், குலேந்திரா, குகேந்திரா, உத்தமிப்பிள்ளை ஆகியோரின் தாயாரும், இயசமனா, சுமதி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மீரா, சுபர்தினி, கலையானந்தி, சொருபானந்தி, சோபானந்தி ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13 - 10 - 91) காலை 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா

[18453]

### யோசை அன்னம்மா

நாவற்குழியை பிறப்பிடமாகவும், நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசை அன்னம்மா நேற்று [12 - 10 - 91] காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற யோசையின் அன்பு மனைவியும், இக்னேசியர் [சிங்கம்], காலஞ்சென்ற மரியதாஸ் [சின்னசின்], அல்பேட் [ராசன்], சில்வஸ்ரர் [அப்பன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், செபஸ்தியாம்பிள்ளை [தம்பு] யின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று [13 - 10 - 91] பிற்பகல் 3 மணிக்குக் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்,

தகவல்:
செ. கென்றி
[எலியாஸ்]

பிறவுண் வீதி,
1 ஆம் ஒழுங்கை 7/3,
யாழ்ப்பாணம்.

[18126]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org